முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1244

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.02.2023, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த ஞான குருவே
   பரமானந்த சதாசிவ சற்குருவே
   பாருலகமெங்கும் தர்மபலம் கூட்டி
   பசிபிணி விரட்டி உலகைமீட்க
2. மீட்கவே வள்ளலாய்வந்த ஞானியே
   மேன்மைபட ஆறுமுகன்யானும் உந்தனுக்கு
   தட்டாதுதொடர்ந்து ஞானஅறிவுரைஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 12 ம் நாள், 24.02.2023 வெள்ளிக்கிழமை)
   தவராஜன்உன் புகழோங்க எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன்நீயே கலியின் சிறந்தஞானி
   உண்மைபட உலகை மாற்றும் மகாயோகி
   கறைபடா உயர் மாந்தர்கள் எல்லாம்
   கலியுகத்தில் உன்வழி வந்து இனிதே
4. மறைபோற்ற ஞானிகளாக உருவெடுத்து
   மண்ணுலகை காக்கும் சக்திகளாவர் என்பேன்
   என்கவே இந்தவித அற்புதத்தை நடத்தும்
   ஏழாம்படை வீட்டின் மாதவசிநீ
5. சிந்தைவைத்து உன் பிரணவக்குடில் நோக்கி
   செகத்தோர் தொடர்ந்து வந்தால்போதும்
   விந்தைபட உலக மாற்றமாக
   வேலவன்என் ஆளுமைகொண்ட நல்லதொரு
6. நல்லதொரு ஞான ஆட்சிக்காலம்
   ஞானிகளெல்லாம் இணைந்த ஞானச்சித்தர் காலமாக
   வல்லமைபட உலகமாற்றம் கண்டு
   வையகமே முழுமைபட பாதுகாப்புக்காணும்
7. காண்கவே அரங்கன் உன்வழி உலகோர் வர
   கலியுகம் ஞானயுகமாக மாறும்
   உண்மைபொருந்திய ஆன்மீகஅரசியல் களமாகதேறி
   உலகமே ஞான ஆட்சி பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–